# பொதுக்காலம் 27ஆம் வாரம் - ஞாயிறு

## இரண்டாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

இறை இயேசுவில் அன்புமிக்க சகோதர, சகோதரிகளே! பொதுக்காலத்தின் 27ஆம் ஞாயிறான இன்று உன்னத உறவான கணவன் - மனைவி உறவு பற்றிச் சிந்திக்க திரு அவை நம்மை அழைக்கின்றது.

ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ சமூகம் அங்கீகரிக்கும் போது அது திருமணம். அதே திருமணத்தை திரு அவை அங்கீகரிக்கும் போது அது திருவருட்சாதனம். குட்டித் திருச்சபையாகிய குடும்பம் சிறப்புற அமைந்தால் மட்டுமே சமுதாயம் சிறப்புறும்.

கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் தனது உடலாகவும், தனது உயிராகவும் எண்ணி வாழும் போது தான் உண்மையான அன்பு நிலைக்கும்.

திருமணத்தின் கனிகளான குழந்தைச் செல்வங்களை உயர்ந்தவர்களாக வளர்த்தெடுக்க முடியும். எனவே திருமணம் என்னும் திருவருட்சாதனத்தின் மூலம் நாம் பெற்ற அழைப்பை ஏற்று இறுதிவரை பிரமாணிக்கத்துடன் வாழவும், நம் குடும்பங்கள் திருக்குடும்பங்களாகத் திகழ்ந்திடவும் வரம் வேண்டி, ஒருமனத்தோராய் இக்கல்வாரிப் பலியில் இணைவோம்.

### முதல் வாசக முன்னுரை

அன்பார்ந்தவர்களே! உலகைப் படைத்த இறைவன் அனைத்தும் நல்லதெனக் கண்டார். மேலும் மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதன்று என்று எண்ணி, அவனுக்கு ஏற்ற துணையை உருவாக்கிக் கொடுத்ததை எடுத்துரைக்கும் தொடக்க நூலின் வார்த்தைகளுக்குச் செவிசாய்ப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

அன்பார்ந்தவர்களே! இயேசு தந்தையின் திருவுளம் நிறைவேற்ற, துன்புற்று பாடுகள் ஏற்றதால் மாட்சி பெற்றவர் ஆனார். அவருடைய மாட்சியில் நாமும் பங்குபெற வரம் வேண்டி எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தின் வார்த்தைகளுக்குச் செவிசாய்ப்போம்.

### மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. அன்புத் தந்தையே இறைவா! திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவரும் தங்களைப் புதுப்பித்து, தம் மந்தையைப் புதுப்பிக்கும் நல்மேய்ப்பர்களாகத் திகழ்ந்திட வரம்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. எங்களைப் பாதுகாக்கும் தலைவரே இறைவா! எங்களோடு இருந்து மக்களின் நிறைவேற்ற நாங்கள் தேர்ந்தெடுத்து இருக்கின்ற தலைவர்கள் மக்களின் தேவைகளை அறிந்து, அவற்றை தக்க சமயத்தில் நிறைவேற்றித் தருபவர்களாக செயல்பட அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்

3. ஆணும் பெண்ணும் நிரந்தரமாக ஒன்றாய் இருக்க வேண்டுமென்று திருமணத்தைத் தோற்றுவித்த எம் இறைவா! பல்வேறு காரணங்களால் பிரிந்து வாழும் குடும்பங்களைக் கண்ணோக்கிப் பாரும். தம்பதிகள் ஒருவரையொருவர் ஏற்றுக் கொண்டு குறைகளை மறந்து, அன்பு செய்து வாழும் வரம்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. எங்களோடு இருந்து எப்பொழுதும் வழிநடத்தும் இறைவா! நீர் தந்த நல்வாழ்விற்காக நன்றி கூறுகிறோம். எங்கள் வாழ்வில் பிறரை காயப்படுத்தாமலும், எங்கள் செயல்களால் பிறருக்கு இடையூறாக இருந்திடாமலும் மனிதம் பேணுபவர்களாக வாழ்ந்திட வரம்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நன்றி : ஆசிரியை திருமதி. ஞா.சொஸ்தினா மேரி, மேலமெஞ்ஞானபுரம்.**

“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com